NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu,* p3
**Date:** 22 August 2015

# அமைச்சர் இங்: மசெக கொள்கைகள் வீடமைப்புப் பேட்டைகள் சார்ந்தவை

மக்கள் செயல் கட்சியின் கொள்கைகள் எப்போதும் வீடமைப்புப் பேட்டைகளில் வசிக்கும் மக்களைச் சார்ந்ததாகத் தான் இருந்து வந்துள்ளது என்றும் அது சாதாரண சிங்கப்பூரர்களின் நலன்களைப் பார்த்துக்கொள்ளும் வகையில்தான் அமைக்கப்படும் என்றும் தற்காப்பு அமைச்சர் இங் எங் ஹென் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கென்ட் ரிட்ஜ் கருத்தரங்கில் பேசிய மக்கள் செயல் கட்சியின் ஏற்பாட்டுச் செயலாளருமான டாக்டர் இங், "மூவறை, நாலறை வீடுகளில் வசிப்பவர்களைச் சுற்றிதான் அரசியல் முறையின் அம்சங்கள் அமைந்திருக்கும் என்பதால், அந்த வகை குடியிருப்பாளர்களின் தேவைகளை முன்னிறுத்தி கொள்கைகள் வகுக்கப்படும். இந்த முறையிலிருந்து மாறினால் அது பிரச்சினைகளுக்கு இட்டுச் செல்லும்," என்று விளக்கினார்.

வரும் பொதுத் தேர்தலில் அனைத்துத் தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்தும் எதிர்க்கட்சிகளின் முடிவை வரவேற்ற அமைச்சர், நாட்டை முன்னெடுத்துச் செல்லக்கூடிய வேட்பாளர்கள் யாவர் என்பதை மக்கள் சிந்தித்து வாக்களிக்க அது வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது என்றார்.

"யாருக்காக வாக்களிக்கிறோம், எதற்காக வாக்களிக்கி றோம், அடுத்த அரசாங்கத்தை அமைக்கக்கூடிய தலைவர்கள் யாவர் என்பது போன்ற கேள்விகளை வாக்காளர்கள் தங்க ளைத் தாங்களே கேட்டுக் கொண்டு, சிந்தித்து, வாக்களிக்க வேண்டும்," என்றும் டாக்டர் இங் வலியுறுத்தினார்.

"வேட்புமனு தாக்கல் தினத்தன்று மக்கள் செயல் கட்சி அரசாங்கத்தை அமைத்து விடுமா என்பது இப்போதைக்கு உறுதியல்ல," என்றும் தற்காப்பு அமைச்சர் இங் கூறினார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.